# மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்: இன்றுடன் நிறைவு

சென்னை, பிப். 27: மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபெற்று வந்த இலவச மருத்துவ பரிசோதனை முகாம் வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெறுகிறது.

மெட்ரோ ரயில் நிறுவனம், அப்பல்லோ மருத்துவமனை ஆகியவற்றின் சார்பில், சென்ட்ரல், ஏஜி, டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுதாங்கல், ஆயிரம்விளக்கு, அண்ணாநகர் டவர், ஷெனாய் நகர் ஆகிய 12 மெட்ரோ ரயில் நிலையங்களில் கடந்த 4 நாள்களாக இந்த மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக வியாழக்கிழமை நடைபெற்ற முகாமில், மெட்ரோ ரயில் பயணிகள், பொதுமக்கள், மெட்ரோ ரயில் நிறுவன ஊழியர்கள் என காலையில் 522 பேரும், மாலையில் 576 பேர் உள்பட 1,098 பேருக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டன.

**இன்றுடன் நிறைவு:** இந்த இலவச மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை (பிப்.28) நிறைவடைகிறது. நிறைவு நாளில், சென்ட்ரல், ஏஜி, டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுதாங்கல், ஆயிரம்விளக்கு, அண்ணாநகர் கோபுரம், ஷெனாய் நகர் ஆகிய 12 மெட்ரோ ரயில் நிலையங்களில் காலை 8 முதல் 12 மணி வரையிலும், மாலை 4 முதல் இரவு 7 மணி வரையும் நடைபெறுகிறது.